# இயேசுவே வாரும்

தொடர்பு முகவரி: ஆமென், கர்த்தராகிய இயேசுவே, வாரும். வெளி. 22:20

சகோ. காலேப் யோசுவா
#11, திருமால் நகர்,
பூவிருந்தவல்லி,
சென்னை - 600 056.

"ஓரேப்"
திருவைகுண்டம் - 628 601.
தூத்துக்குடி மாவட்டம்.

## இரண்டு எஜமான்களுக்கு ஊழியம்

1. இயேசு கிறிஸ்துவின் ஊழியக்காரனும், சுவிசேஷகனாகும்படி அழைக்கப்பட்டவனும், கிறிஸ்துவின் சரீரமாகிய சபையானது பக்திவிருத்தியடைவதற்காக சுவிசேஷத்திற்காக பிரித்தெடுக்கப்பட்டவனுமாகிய நான்; தேவப்பிரியரும், பரிசுத்தவான்களாகும்படி அழைக்கப்பட்டவர்களுமாகிய அனைவருக்கும் எழுதுகிறதாவது:
நம்முடைய பிதாவாகிய தேவனாலும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலும் உங்களுக்கு கிருபையும் சமாதானமும் உண்டாவதாக.

2. இயேசு கிறிஸ்து தம்முடைய சீஷர்களுக்கு ஜெபம் பண்ண கற்றுக்கொடுத்த விதத்தின் தொடக்கப் பகுதியானது: பரமண்டலங்களிலிருக்கிற எங்கள் பிதாவே, உம்முடைய ராஜ்யம் வருவதாக;... உம்முடைய சித்தம் பரமண்டலத்திலே செய்யப்படுகிறது போல பூமியிலேயும் செய்யப்படுவதாக என்பதாகும். மத்.6:9,10. உம்முடைய ராஜ்யம் என்று கூறப்பட்டுள்ள பரலோக ராஜ்யம் ஆங்கிலத்தில் (Kingdom of heaven) என்றும் கிரேக்க பாஷையில் மல்கூத் சமாயீம் (Malkuth Shamayim) என்றும் அழைக்கப்படுகிறது. இதற்கு இறையாட்சி என்று பொருள். அதாவது பரலோகத்தில் வீற்றிருக்கிற தேவனுடைய ஆட்சி பூமியின் மேல் ஆகும். The rule of the God of heaven over the earth அதாவது உன்னதமானவர் மனுஷருடைய ராஜ்யத்தில் ஆளுகைசெய்து தமக்கு சித்தமாயிருக்கிறவனுக்கு அதைக் கொடுப்பதாகும். தானி.4:17,25,32. The Most High ruleth in the kingdom of men. அப்படியானால் இந்தியாவை பாரதீய ஜனதா மற்றும் அதன் தோழமை கட்சிகள் திரு.அட்டல் பிகாரி வாஜ்பாய் தலைமையின் கீழ் ஆளுவது உன்னதமானவரின் சித்தம் என அறிந்து கொள்ளலாம். அவ்வண்ணமாகவே நமது தமிழ் நாட்டையும் அ.இ.அ.தி.மு.க.வின் தலைவி செல்வி.ஜெயலலிதா ஆட்சி செய்வது உன்னதமானவரின் சித்தமாகும். பூமியும் அதன் நிறைவும், உலகமும் அதிலுள்ள குடிகளும் கர்த்தருடையது சங்.24:1. ராஜ்யம் கர்த்தருடையது; அவர் ஜாதிகளை ஆளுகிறவர். சங்.22:28.

3. இயேசு மத்.6:10ல் உம்முடைய ராஜ்யம் வருவதாக என்று சீஷர்களுக்குக் கற்றுக்கொடுத்த பரலோக ராஜ்யம் இப்பூமிக்குரியதாகும். மத்.13வது அதி.யில் உள்ள ஏழு உவமைகள் பூமியில் பரலோக ராஜ்யத்தின் தன்மைகளை வெளிப்படுத்துகிறது. 41,42வது வசனங்களை வாசித்தால் அவருடைய ராஜ்யத்திலிருக்கிற சகல இடறல்களையும், அக்கிரமம் செய்கிறவர்களையும் சேர்த்து அக்கினிச் சூளையிலே போடுவார்கள் என்று கூறப்பட்டுள்ளது. மேலும் 49,50 வசனங்களை வாசித்தால் நீதிமான்களின் நடுவிலிருந்து பொல்லாதவர்களைப் பிரித்து, அவர்களை அக்கினிசூளையிலே போடுவார்கள் என்று கூறப்பட்டுள்ளது. இன்னும் 26,30 வசனங்களில் முதலாவது கோதுமையிலிருந்து களைகளைப் பிடுங்கி அவைகளை சுட்டெரிக்கிறதற்கு கட்டு கட்டாகக் கட்டுங்கள் எனக் கூறப்பட்டுள்ளது. இதிலிருந்து பரலோக ராஜ்யம் பூமிக்குரியது என்பதை நாம் நன்கு அறிந்துகொள்ளலாம்.

4. அடுத்து பரலோக ராஜ்யமாகிய தேவனுடைய ராஜ்யம் எப்பொழுது வருமென்று பரிசேயர் இயேசுவினிடத்தில் கேட்ட பொழுது, அவர் தேவனுடைய ராஜ்யம் பிரத்தியட்சமாய் (Outword show) வராது. இதோ, இங்கே என்றும், அதோ அங்கே என்றும் சொல்லப்படுகிறதற்கும் ஏதுவாயிராது என்றார். லூக்.17:20. அதாவது நாம் வெளிப்படையாக காணும்படியாக தேவனுடைய ராஜ்யம் இதோ இங்கே, அல்லது அதோ அங்கே இருக்கிறது என்று கூறுவதற்கு ஏதுவாகயிராது என்றார். மாறாக தேவனுடைய ராஜ்யம் பலத்தோடு வருகிறது. மாற்.9:1. (Kingdom of God with power) அது உன்னதத்திலிருந்து வரும் பலன். (Power from on High) லூக்.24:47-49 என்றார்.

5. மேலும் சீஷர்களிடம் தேவனுடைய ராஜ்யத்துக்குரியவைகளை பேசி அவர்கள் எருசலேமில் காத்திருக்க வேண்டும், பரிசுத்தஆவி வரும், அப்பொழுது பெலனடைவார்கள் என்றார். அப்.1:3-8. அதுவே உன்னதத்திலிருந்து வரும் பலனாகும். ஆக பரிசுத்தஆவியே தேவனுடைய ராஜ்யம் ஆகும். ஆதலால் தான் இயேசு: இதோ தேவனுடைய ராஜ்யம் உங்களுக்குள் இருக்கிறது என்றார். லூக்.11:27.

6. பரிசுத்தஆவி தான் தேவனுடைய ராஜ்யம் என்பதை விளக்க, மேலும் இயேசு ஒருவன் மறுபடியும் பிறவாவிட்டால் தேவனுடைய ராஜ்யத்தைக் காணமாட்டான் என்றார். யோ.3:3. Except a man be born again, he can't see the kingdom of God. நீங்கள் காண முடியாது என்பது நீங்கள் அறிந்துகொள்ள முடியாது, புரிந்துகொள்ள முடியாது என பொருள்படும். மறுபிறப்பு அடையாத ஒருவன் தேவனுடைய ராஜ்யத்தை அறிந்து, புரிந்து கொள்ள முடியாது. ஏனென்றால் அது பரிசுத்தஆவி.

7. ஆனால் மறுபிறப்பு அடைந்தவர்கள் தங்களுக்குள் பரிசுத்தஆவி இருக்கிறது என்பதை உணர்ந்துகொள்ள முடியும். ஏனென்றால் அது அவர்களுக்குள் இருந்து அவர்களை அசைவிக்கிறது. (Moving), அவர்களை ஆளுகை செய்கிறது (Governing), அவர்களை கட்டுப்படுத்துகிறது (Controlling) ஆக ஜலத்தினாலும், ஆவியினாலும் பிறந்தவர்கள் (யோ.3:6) இருதயத்தில் பரிசுத்தஆவி இருந்து அவர்களை ஆளுகை செய்கிறது. ஆனால் மறுபிறப்பு அடைந்தவனுக்குள் பரிசுத்தஆவி இருப்பதால் அவன் அதை உணர முடியும். ஆனால் அதை பார்க்க முடியாது. மறுபிறப்பு அடையாதவர்கள் தேவனுடைய ராஜ்யத்தைப் பார்க்க முடியாது, தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்க முடியாது, அதை அறிந்து, புரிந்துகொள்ள முடியாது. ஏனென்றால் அது பரிசுத்தஆவி.

8. அடுத்து, இந்த உலகத்தின் அதிபதி சாத்தான். அவனுடைய நியாயத்தீர்ப்பு முடிந்துவிட்டது. ஆதலால் இனி அவனுக்கு நியாயத்தீர்ப்பு கிடையாது. ஆதலால் அவனுக்கு தேவனிடத்தில் ஒன்றுமில்லை. அவரும் உலகத்துக்காக வேண்டிக்கொள்கிறதில்லை. யோ.12:31; 14:30; 16:11; 17:9 ஆதலால் உலக சிநேகம் தேவனுக்கு விரோதமான பகை. உலகத்துக்கு சிநேகிதன் தேவனுக்கு பகைஞன். யாக்.4:4. நாமும் இந்த உலகத்தின் ஆவியை பெறவில்லை. 1கொரி.2:12. ஆதலால் இந்த உலக காரியங்களை நாம் விரும்புவதில்லை. நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினால் இந்த உலகம் நமக்கு சிலுவையில் அறையுண்டு இருக்கிறது. நாமும் உலகத்துக்கு சிலுவையில் அறையுண்டு இருக்கிறோம். கலா.6:14. அவர் நம்மை இந்த உலகத்திலிருந்து தெரிந்துகொண்டார். நாம் இந்த உலகத்துக்குரியவர்களில்லை. யோ.15:19. நம்முடைய குடியிருப்பு பரலோகத்திலிருக்கிறது. பிலி.3:20.

9. தேவனுடைய ராஜ்யத்துக்குரியவர்கள் இந்த உலகத்தில் ஜீவனம் செய்தாலும், அவர்கள் இந்த உலகத்திலிருந்து வேறு பிரிக்கப்பட்ட ஜனங்கள். அவர்கள் ஜாதிகளோடே கலவாமல் தனியே வாசமாயிருக்கும் ஜனங்கள். அவர்கள் அவிசுவாசிகளுடன் தங்களை பிணைத்துக்கொள்ளமாட்டார்கள். அநீதிக்கும் அவர்களுக்கும் சம்பந்தமில்லை. இருளுடன் அவர்களுக்கு ஐக்கியமில்லை. பேலியாளுடன் அவர்களுக்கு இசைவு இல்லை. விக்கிரகங்களுக்கும் அவர்களுக்கும் சம்பந்தமில்லை. அவர்கள் அசுத்தமானதைத் தொடுவது கிடையாது. அவிசுவாசிகளுடன் அவர்களுக்குப் பங்கு இல்லை. அவர்களுடைய பழக்கவழக்கங்கள் யாவும் விகற்பமாயிருக்கும், இந்த உலகத்தை சார்ந்திருப்பதில்லை. ஏனென்றால் அவர்கள் இந்த உலகத்துக்குரியவர்கள் அல்ல.

10. இப்பொழுது தேவனுடைய ராஜ்யத்துக்குரியவர்களாயிருந்து கிறிஸ்துவின் சரீரத்தில் அவையவமாய் உள்ளவர்கள் ஒரே ஆவியினாலே ஒரே சரீரத்துக்குள்ளாக ஞானஸ்நானம் பண்ணப்பட்டு, ஒரே ஆவிக்குள்ளாக தாகந்தீர்க்கப்பட்டவர்கள். 1கொரி.12:13. இவ்வாறாக ஜலத்தினாலும் ஆவியினாலும் பிறந்தவர்கள் அனைவரும் தேவனுடைய குமாரனைப் பற்றும் விசுவாசத்திலும் அறிவிலும் ஒருமைப்பட்டவர்களாகி, கிறிஸ்துவினுடைய நிறைவான வளர்ச்சியின் அளவுக்குத்தக்க பூரண புருஷராகும் வரைக்கும், பரிசுத்தவான்கள் சீர்பொருந்தும் பொருட்டு, சுவிசேஷ ஊழியத்தின் வேலைக்காகவும், கிறிஸ்துவின் சரீரமாகிய சபையானது பக்திவிருத்தியடைவதற்காகவும், கர்த்தர் சிலரை அப்போஸ்தலராகவும், சிலரை தீர்க்கதரிசிகளாகவும், சிலரை சுவிசேஷகராகவும், சிலரை மேய்ப்பராகவும் போதகராகவும் ஏற்படுத்தினார். எபே.4:11-13.

11. ஜலத்தினாலும் ஆவியினாலும் பிறந்தவர்கள் வெளியே அழைக்கப்பட்டு பரிசுத்தஆவியின் அபிஷேகத்தைப் பெற்றவர்களாய் தேவனுடைய ஆசீர்வாதத்தினால் நிரப்பப்பட்டு, பரிசுத்தவான்களாய் ஒன்றுகூடி உன்னதங்களில் உட்கார்ந்திருக்கிறார்கள். இவர்களது ஆவி இவர்களை பரலோகத்தின் சூழ்நிலைக்குக் கொண்டு வந்து விட்டது. ஏனென்றால் இவர்கள் பரலோக ராஜ்யத்துக்குரியவர்கள். இவர்கள் தங்கள் ஆத்துமாவில் பரலோகத்தைச் சேர்ந்தவர்களாயிருக்கிறார்கள். ஆனால் மாம்சத்தின்படி இப்பிரபஞ்சத்தில்/உலகில் வாழ்கிறார்கள். ஆதலால் தான் நாம் இந்த உலகத்தில் வாழ்ந்துகொண்டிருந்தாலும் அப்போஸ்தலனாகிய பவுல் எபேசியருக்கு எழுதும் போது நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் பிதாவாகிய தேவனுக்கு ஸ்தோத்திரம்; அவர் கிறிஸ்துவுக்குள் உன்னதங்களிலே ஆவிக்குரிய சகல ஆசீர்வாதத்தினாலும் நம்மை ஆசீர்வதித்திருக்கிறார் என எழுதுகிறான். எபே.1:3.

12. தேவனுடைய ராஜ்யத்தில் கிறிஸ்துவின் சரீரமாகிய சபையில் அவையவமாயுள்ள இந்த பரிசுத்த வான்கள் பக்திவிருத்தியடைவதற்காகத் தான் கர்த்தர் ஐந்துவகை ஊழியங்களை ஏற்படுத்தினார். இந்நாட்களில் நமது மத்தியில் அநேகர் இந்த உலகத்தின் அதிபதியாகிய சாத்தானின் ஆளுகைக்குள்ள அரசாங்கத்தில் பணிபுரிந்துகொண்டு, மற்றும் வியாபார ஸ்தலங்களில் பணியில் இருந்து கொண்டு தங்களை அவர்களுக்கு சேவகம் எழுதிக்கொடுத்து, பின் வந்து, கர்த்தர் தம்முடைய சரீரமாகிய சபை பக்திவிருத்தியடைய என்னை பாஸ்டராக, அப்போஸ்தலனாக, தீர்க்கதரிசியாக, போதகனாக, சுவிசேஷகனாக ஏற்படுத்தியுள்ளார் என்கிறார்கள். நம் மத்தியில் அநேக பாஸ்டர்கள் அரசாங்க உத்தியோகத்தில் அல்லது தனியார் கம்பெனிகளில் வேலை செய்துகொண்டு வருகிறார்கள். சிலர் பகுதிநேர ஊழியம் செய்து வருகிறார்கள். ஆக இரண்டு எஜமான்களுக்கு ஊழியம் செய்கிறார்கள். இவர்களை கர்த்தர் ஏற்படுத்தினாரா என்று நாம் தேவனுடைய வார்த்தைக்கொண்டு நிதானிக்க வேண்டியவர்களாயிருக்கிறோம். இவர்களில் நான் அறிந்த சிலர் அ) சென்னை, சனட்டோரியம், பாஸ்டர் காபிரியேல் பக்தசிங் ஆ) பொன்னேரி, பாஸ்டர் வில்பிரட் இ) கூடுவாஞ்சேரி, மாடம்பாக்கம், பாஸ்டர் சக்ரவர்த்தி அருள்தாஸ் ஈ) நெல்லை, பாஸ்டர் செல்வபாலன் உ) மும்பை, பாஸ்டர் டேனியல் கிறிஸ்டியான் ஊ) நாக்பூர், பாஸ்டர் அனுராக் எ) நியூடெல்லி, பாஸ்டர் பிராவின்லால் ஏ) கோவா, பாஸ்டர் ராபர்ட் பர்னாடஸ் ஐ) கோவை, பாஸ்டர் ஜார்ஜ் பின்டோ ஒ) புதுக்கோட்டை, பாஸ்டர் ஜான் நேசக்குமார். இந்த பட்டியலில் இன்னும் அநேகர் உண்டு.

13. இரண்டு எஜமான்களுக்கு ஊழியம் செய்ய ஒருவனாலும் கூடாது. தேவனுக்கும் உலகப்பொருளுக்கும் ஊழியம் செய்ய உங்களால் கூடாது என்று கர்த்தர் திட்டவட்டமாகக் கூறுகிறார். மத்.6:24, லூக்.16:13. அதாவது தேவனுக்கும், சாத்தானுக்கும் ஊழியம் செய்ய ஒருவனால் கூடாது. அ) ஒன்று அவன் தேவனுக்கு ஊழியம் செய்ய வேண்டும் அல்லது சாத்தானுக்கு ஊழியம் செய்ய வேண்டும். ஆ) ஒன்று கர்த்தர் தெய்வமானால் அவன் அவரைப் பின்பற்ற வேண்டும் அல்லது பாகால் தெய்வமானால் அவனைப் பின்பற்ற வேண்டும். 1எரா.18:21. இ) ஒன்று நீ மனுஷரை நாடி போதிக்க வேண்டும், மனுஷரை பிரியப்படுத்த போதிக்க வேண்டும் அல்லது தேவனை நாடி போதிக்க வேண்டும். நீ தேவனை நாடி போதித்தால் மட்டுமே கிறிஸ்துவின் ஊழியக்காரன். நீ மனுஷனை நாடி போதித்தால் நீ சாத்தானின் ஊழியக்காரன். கலா.1:10. ஈ) உன் ஊழியத்தின் பாதையில் ஒன்று நீ மனுஷருக்கு பிரியமாயிருக்க விரும்புகிறவனாய் பார்வைக்கு ஊழியம் செய்ய வேண்டும் அல்லது தேவனுக்குப் பயப்படுகிறவனாய் சமயம் வாய்த்தாலும் வாய்க்காவிட்டாலும் ஜாக்கிரதையாய் திருவசனத்தை பிரசங்கம் பண்ணி, எல்லா நீடிய சாந்தத்தோடும் உபதேசத்தோடும் கண்டனம் பண்ணி கடிந்துகொண்டு புத்திசொல்ல வேண்டும். உ) உன்னுடைய ஊழியம் ஒன்று நீ மனுஷனிடத்தில் பெற்றதாக இருக்க வேண்டும் அல்லது அது நீ தேவனிடத்திலிருந்து பெற்றதாக இருக்க வேண்டும். ஊ) ஒன்று நீ தேவசித்தத்துக்குப் புறம்பாக அவருக்கென்று நீ செய்யும் ஒரு ஊழியமாக இருக்க வேண்டும் அல்லது அது தேவனால் ஏற்படுத்தப்பட்ட, தேவனுடைய சித்தத்தினாலே இயேசு கிறிஸ்துவின் ஊழியக்காரனாயிருக்க வேண்டும்.

எ) ஒன்று நீ உலகத்துக்கு சேவகனாகயிருக்க வேண்டும் அல்லது தேவனுக்கு ஊழியக்காரனாகயிருக்க வேண்டும். ஏ) ஒன்று நீ கபடமில்லாத இருதயத்தோடு உண்மையும் உத்தமுமாக ஊழியம் செய்ய வேண்டும் அல்லது பொருளாசைகளில் பழகி தசமபாகம், காணிக்கைக்காக ஊழியம் செய்ய வேண்டும்.

14. பாருங்கள், நீங்கள் இரண்டு நினைவுகளில் குந்திக் குந்தி நடக்க முடியாது. 1இரா.18:21. ஏதாவது ஒன்றைப் பற்றிக்கொள்ள வேண்டும். கர்த்தரையும் விக்கிரகங்களையும் நீங்கள் சேவிக்கக்கூடாது. 2இரா.17:41. நிச்சயமாக நீங்கள் இரு எஜமான்களுக்கு சேவை செய்ய முடியாது. ஏதாவதொரு எஜமானை நீங்கள் தெரிந்துகொள்ளத்தான் வேண்டும். ஒன்று நீ சாத்தானுடைய ராஜ்யத்தில் அவனுக்கென்று பணிசெய்ய வேண்டும் அல்லது தேவனுடைய ராஜ்யத்தில் அவருடைய சரீரமாகிய சபையானது பக்திவிருத்தியடைவதற்கென்று ஊழியம் செய்யவேண்டும். அவ்வாறாகவே விசுவாசிகளாகிய நீங்களும் உங்கள் முழு இருதயத்தோடும், முழு ஆத்துமாவோடும், முழு மனதோடும், முழு பலத்தோடும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினிடத்தில் அன்பு கூறவேண்டும் அல்லது அவ்வண்ணமாகவே சாத்தானிடத்தில் அன்புகூற வேண்டும். இருவரையும் நீங்கள் நேசிக்க முடியாது.

15. தண்டில் சேவகம் பண்ணுகிற எவனும், தன்னை சேவகம் எழுதிக்கொண்டவனுக்கு ஏற்றவனாய் இருக்கும்படி, பிழைப்புக்கடுத்த அலுவல்களில் சிக்கிக்கொள்ள மாட்டான். 2தீமோ.2:4. நீ உன்னை சேவகம் எழுதிக்கொண்ட இயேசு கிறிஸ்துவுக்கு ஊழியம் செய்ய விரும்பினால், உன்னை உன் பிழைப்புக்கடுத்த அலுவல்களில் சிக்கவைத்துக்கொள்ளாதே. ஜீவனத்தின் பெருமை உன்னை ஆட்கொள்ள விடாதே. ஜீவனத்தின் பெருமையினால் உலகம் உன்னை இழுக்க இடம் கொடுக்காதே. 1யோ.2:16. ஒருபுறம் ஒரு நல்ல, நிரந்தரமான உத்தியோகம், வருமானம் மேலும் ஓய்வுகால ஊதியம் அதாவது ஜீவனத்தின் பெருமை; மற்றொரு பக்கம் தேவனுக்கென்று ஊழியம். நிச்சயமாய பண ஆசை உன்னை ஆளுகை செய்கிறது. நீ தேவனுடைய வசனத்தை கலப்பாய் உன் சூழ்நிலைக்கு ஏற்றவாறு கையாண்டு தேவனுடைய வசனத்தைக் கொண்டு வியாபாரம் செய்கிறாய். இருமனமுள்ள நீ உன் வழிகளில் நிலையற்றவனாயிருக்கிறாய். ஆதலால் இருமனமுள்ள நீ உன் இருதயத்தை பரிசுத்தமாக்கு. யாக்.1:8,4:8.

16. ஒரு உண்மையும் உத்தமுமான ஊழியக்காரன் தன்னை சேவகம் எழுதிக்கொண்டவனுக்கு ஏற்றவனாய் இருக்கவிரும்பினால், தன்னை பிழைப்புக்கடுத்த அலுவல்களில் சிக்க வைக்க மாட்டான். நீ தேவனால் ஏற்படுத்தப்பட்ட ஊழியக்காரனாய் இருப்பாயாகில், உன்னை கிறிஸ்து தம்முடைய சரீரமாகிய சபை பக்திவிருத்தியடையச் செய்ய ஐந்துவகை ஊழியத்தில் ஒரு ஊழியக்காரனாக உன்னை சேவகம் எழுதிக்கொண்டிருப்பாராகில் நீ பிழைப்புக்கடுத்த அலுவல்களில் உன்னை சிக்கவைத்துக்கொள்ள மாட்டாய். நீ ஒரு பக்கம் உலக அரசாங்கத்துக்கு சேவகம் செய்ய எழுதிக்கொடுத்து, தனியார் கம்பெனிகளில் சேவகம் செய்ய எழுதிக்கொடுத்து அதே நேரத்தில் தேவனுக்கும் சேவகம் செய்ய எழுதிக்கொடுக்க முடியாது. நீ ஒரு பக்கம் சாத்தானுடைய ஊழியக்காரனாயிருந்து மறுபக்கம் தேவனுடைய ஊழியக்காரனாகவும் இருக்க முடியாது. நீ ஒரே நேரத்தில் சாத்தானுக்கும் தேவனுக்கும் ஊழியம் செய்ய முடியாது, கூடாது. இரண்டு எஜமான்களுக்கு நீ ஒரே நேரத்தில் ஊழியம் செய்ய முடியாது. ஏதாவது ஒன்றை தெரிந்துகொள்ளத்தான் வேண்டும். நீ இரண்டிலும் கால் வைத்தால் நீ ஒரு மாய்மாலக்காரன். நீ ஒரு காகம்.

17. பண ஆசை எல்லா தீமைக்கும் வேராயிருக்கிறது. நாம் என்ன செய்ய வேண்டுமென்று நமது பணம் நமக்கு கட்டளையிட இடம் கொடுப்பதின் மூலம் நாம் முதலில் தேவனுக்கு செவிகொடுக்க மறுக்கிறோம். அரசாங்கத்தில் வேலை செய்வதினால் கிடைக்கும் நல்ல வருமானமும், சலுகைகளும் உங்களை வசீகரித்து, நீங்கள் இப்பிரபஞ்ச கவர்ச்சிக்கு அடிமைப்பட்டவர்களானீர்கள். ஆதலால் நீங்கள் இவ்வுலக ஆவியுடையவர்களும், இவ்வுலகத்திற்கு உரியவர்களும் ஆவீர்கள். கிறிஸ்துவின் சீஷர்களோ இவ்வுலகத்துக்குரியவர்கள் அல்ல. யோ.15:19,17:14,16.

18. ஒரு ஊழியக்காரன் தொழில் செய்யலாம். அதனால் அவன் தண்டில் எவனுக்கும் சேவகம் எழுதிக் கொடுக்கவில்லை. அவன் சுயாதீனன். அவன் யாருக்கும் அடிமையில்லை. கர்த்தர் தாமே தொழில் செய்கிறவராயிருந்தார். மாற்.6:3. ஊழியம் செய்தார். தொழிலில் தன் தகப்பனுக்கு உதவியாகயிருந்தார். தொழில் அவரது ஊழியத்தைக் கட்டுப்படுத்தவில்லை, பாதிக்கவில்லை. பவுல், எங்கள் கைகளினாலே வேலைசெய்து பாடுபட்டோம் என்கிறான். 1கொரி.4:12. நீங்கள் அறிந்திருக்கிறபடி, எனக்கும் என்னுடனே கூட இருந்தவர்களுக்கும் வேண்டியவைகளுக்காக இந்த கைகளே வேலைசெய்தது. இப்படி பிரயாசப்பட்டு பலவீனரை தாங்கவும், வாங்குகிறதைப் பார்கிலும் கொடுக்கிறதே பாக்கியம் என்று கர்த்தராகிய இயேசு கிறிஸ்து சொன்ன வார்த்தைகளை நினைக்கவும் வேண்டுமென்று எல்லாவிதத்திலும் உங்களுக்கு காண்பித்தேன் என்கிறான். அப்.20:34,35. அதே நேரத்தில் ஒருவன் வேலைசெய்ய மனதில்லாதிருந்தால் அவன் சாப்பிடவும் கூடாது. ஒருவன் யாதொரு வேலையும் செய்யாமல், வீண் அலுவர்காரராய், ஒழுங்கற்று திரியவும் கூடாது, ஒருவன் அமைதலோடே வேலைசெய்து தங்கள் சொந்த சாப்பாட்டை சாப்பிட வேண்டும் என்று கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலே கட்டளையிட்டு புத்தியும் சொல்லுகிறான். 2தெச.3:10-12.

19. ஏழாம் சபைக்காலத் தூதன் இரண்டு எஜமான்களுக்கு ஊழியம் செய்வது குறித்து என்று கூறுகிறார்?

1) ஒவ்வொரு அரசாங்கமுமே சாத்தானுடைய சிங்காசனமாயுள்ளது. ஒவ்வொரு அரசாங்கமும் பிசாசினால் ஆதிக்கம் செலுத்தப்படுகிறது. கிறிஸ்துவினால் ஆதிக்கம் செலுத்தப்படும் ஒரு அரசாங்கம் வரப்போகிறது; அது ஆயிரம் வருடம் அரசாட்சியில் தான் ஏற்படப்போகின்றது. ஆனால் இப்பொழுது இவ்வுலக காரியங்களோ அவைகள் எவ்வளவாய் நல்லதென நம்மில் கருதப்பட்ட போதிலும், அவைகளின் பின்னால் சாத்தான் நின்று ஆதிக்கம் செலுத்தி வருகிறான். பிசாசானவனே கூறியுள்ளான் "இந்த ராஜ்யங்கள் யாவும் என்னுடையவைகள்" (முற்றிலுமானவர் பக்கம் 9,பத்தி 23)
2) He controls every kingdom; satan does. Every government, everything, every kingdom, contolled by satan. The whole world is controlled and run by satan (God's gifts always find their places, para 73) அனைத்து ராஜ்யங்களும், ஒவ்வொரு அரசாங்கமும் சாத்தானால் ஆளுகை செய்யப்படுகிறது. அவனே முழு உலகத்தையும் கட்டுப்படுத்தி அதை ஆளுகை செய்கிறான்.

3) This world, every government (We don't want to believe that), but the Bible plainly states it, that every government, every kingdom of the earth is owned by the devil and ruled by the devil (Things that are to be, para 54) இந்த பூமியிலுள்ள ஒவ்வொரு அரசாங்கமும், ஒவ்வொரு ராஜ்யமும் பிசாசுக்கு சொந்தமானது, அது அவனால் ஆளுகை செய்யப்படுகிறது. ஆனால் நாம் இதை நம்ப மறுக்கிறோம். ஆனால் வேதாகமம் இதை திட்டவட்டமானக் கூறுகிறது என்கிறார்.
4) அரசியலில் ஊழல்... அது என்ன? லஞ்சம் வாங்கும் கூட்டம். அதில் பணிபுரியும் மறுபடியும் பிறக்காதவர் அனைவரும் பிசாசினால் உண்டானவர்கள். இவ்வுலகத்திலுள்ள ராஜ்யங்கள் அனைத்தும் எனக்குச் சொந்தம் என்று சாத்தான் உரிமைகோரினான். இயேசு அவனுடன் அதைக் குறித்து விவாதிக்க வில்லை. உலகம் பிசாசின் கட்டுக்குள் உள்ளது. அரசாங்கத்துக்கு வேலை செய்யும் ஒவ்வொரு மனிதனும், அவன் கிறிஸ்தவனாயிராமல் போனால், பிசாசுக்கு சொந்தமானவனாகயிருந்து பிசாசுக்கு வேலை செய்கிறான். (தேவனுடைய வார்த்தையைக் கேட்டு, அதை அடையாளம் கண்டு கொண்டு, அதன்படி நடத்தல், பக்கம் 47, பத்தி 204)

20. பாருங்கள், இப்பொழுது ஒரு உண்மையான கிறிஸ்தவன், மறுபடியும் பிறந்தவன், பரிசுத்தஆவியைப் பெற்றவன் இந்த அரசாங்கத்தில் வேலை செய்ய முடியுமா? முடியவே முடியாது. ஏனென்றால் இந்த அரசாங்கம் சாத்தானால் ஆளுகை செய்யப்பட்டு வருகிறது. அவனுடைய ஆளுகையில், கிறிஸ்துவினுடைய ஆளுகைக்குட்பட்டவர்கள் பணிபுரிய முடியுமா? முடியவே முடியாது. ஏனென்றால் இரு ஆளுகையும் ஒன்றுக்கொன்று வித்தியாசமானது, மாறுபாடானது. ஒரு மனிதன் ஒரே நேரத்தில் சாத்தானுடைய ஆளுகையின் கீழிருந்து அவனுக்கும்; அதே நேரத்தில் கிறிஸ்துவின் ஆளுகையின் கீழிருந்து அவருக்கும் ஊழியம்/பணி செய்யமுடியுமா? முடியவே முடியாது. நிச்சயமாக நீ ஒரே நேரத்தில் இரண்டு எஜமான்களுக்கு ஊழியம் /பணி செய்ய முடியாது. நீ இருவரையும் ஒரே நேரத்தில் நேசிக்க முடியாது. நீ ஒருவரை பகைத்து ஒருவனை நேசிப்பாய். அல்லது நீ ஒருவனைப் பற்றிக்கொண்டு ஒருவனை அசட்டை பண்ணுவாய். ஒரு ஆவிக்குரியவன் மாம்சத்தில் நடந்தாலும் அவன் மாம்சத்துக் கேற்றவைகளை சிந்திக்க மாட்டான். மாம்சத்துக்கேற்றவைகளை செய்ய மாட்டான். ஏனென்றால் அவனை ஆட்கொள்வது உலகத்தின் ஆவியல்ல, மாறாக தேவனுடைய ஆவி. அவன் அனைத்து காரியத்திலும் ஆவிக்குரிய பிரகாரமாகவே செயல்படுவான். நீ சாத்தானுடைய அலுவலகத்தில் வேலை செய்துகொண்டு ஆவிக்குரிய பிரகாரமாக அங்கு செயல்பட முடியாது.

21. ஐந்துவகை ஊழியத்தில் ஒரு ஊழியமாகிய பாஸ்டர் ஊழியத்தில் இருப்பதாக தன்னை அழைத்துக் கொள்ளும் சென்னை, சானட்டோரியம் பாஸ்டர் காபிரியேல் பக்தசிங் அவர்களுக்கு நான், அவர்களை காண வருவதாக கடிதம் எழுதிச்சென்று குறிப்பிட்ட நாளில் பார்க்கச்சென்றேன். ஆனால் அவர் வீட்டில் இல்லை. அவர் அலுவலகத்திற்கு சென்றுவிட்டதாக கூறினார்கள். அவரது துணைவியார் அவரை அழைத்துவர அலுவலகத்திற்கு ஒரு ஆள் அனுப்பினார்கள். ஏனென்றால் அவரது அலுவலகம் அவரது வீட்டிற்கு அருகாமையில் உள்ளது. அவர் தனது அலுவலகத்தில் ஆய்வு நடந்து வருகிறது, மந்திரியை எதிர்நோக்கிக்கொண்டிருக்கிறார்கள், ஆதலால் வரமுடியாது என கூறிவிட்டார். பாருங்கள் தன்னை கிறிஸ்துவின் ஊழியக்காரனென்று அழைத்துக்கொள்பவரை, மற்றொரு ஊழியக்காரன் பார்க்க முடியவில்லை. ஏனென்றால் அவர் தன் பிழைப்புக்கடுத்த அலுவல்களில் சாத்தானிடம் சிக்கிக் கொண்டார். ஆனால் சகோதரி காபிரியேலைப் போன்று செய்தியின் மேல் பசித்தாகம் உள்ள ஒரு சகோதரியை நான் என் ஊழியத்தின் பாதையில் இதுவரை கண்டதில்லை. நான் சென்ற சமயம் அவர்களுடைய சமையல் நேரம். அங்கு சமையல் நடந்துகொண்டிருந்தது. அதே நேரத்தில் தீர்க்கதரிசியின் செய்தியை ஒலிநாடாவில் போட்டு கேட்டுக்கொண்டிருந்தார்கள். சகோதரிக்கு எனது பாராட்டுக்கள். ஆனால் சகோதரன் என் ஊழியத்தை அங்கீகரிக்கிறாரோ இல்லையோ, நான் அவருடைய ஊழியத்தை அங்கீகரிப்பதில்லை. ஏனென்றால் அது தேவனுடைய வார்த்தையின் அடிப்படையிலில்லை.

22. சகோதரி காபிரியேலிடம் கேட்டேன், ஐயாவை எப்போது தான் பார்க்க முடியும்? அவர் தன் அரசாங்க பணியை முடித்து வந்தபின், அதாவது பொதுவாக இரவு நேரங்களில் அல்லது ஞாயிறு தான் சந்திக்க முடியும் எனக் கூறினார்கள். பாருங்கள் தேவனுடைய ஊழியக்காரனுக்கு தன் ஊழியத்தை செய்ய பகலில் நேரம் கிடையாது. இரவு மட்டும் தான் நேரம் அல்லது ஞாயிறு ஒரு நாள் மட்டும் தான் நேரம். பாருங்கள், இவர் தேவனுக்கு ஊழியம் செய்கிறாரா அல்லது சாத்தானுக்கு ஊழியம் ஊதியத்துக்காக செய்கிறாரா? இவருக்கு தேவனுடைய ஊழியம் ஒரு பகுதிநேர தொழிலாகயிருக்கிறது. அப்படியானால் அது தேவனுடைய ஊழியமா? நீங்களே எல்லாவற்றையும் சீர்தூக்கிப்பாருங்கள்.

23. மும்பை, சகோ.டேனியல் கிறிஸ்டியான் ஒரே வேளையில் அங்கே அரசாங்கப்பணியில் இருந்துகொண்டிருப்பார், இங்கே சபையில் பிரங்கம் பண்ணிக்கொண்டிருப்பார். ஒரே நேரத்தில் இரு வேலைகள். சாத்தானுக்கும் வேலை அதே நேரத்தில் தேவனுக்கும் ஊழியம். பாருங்கள், ஒருவனைப் பகைத்து ஒருவரை நேசிக்க வேண்டியதாயுள்ளது. அங்கு ஐயா, நான் வியாதியில் உள்ளேன், டாக்டரிடம் சிகிச்சை பெற்றுவருகிறேன் என்பார். இங்கு நான் வியாதியுள்ளவர்களுக்காக ஜெபிக்கப்போகிறேன் என்று பிரசங்கபீட அழைப்பு கொடுத்துக்கொண்டிருப்பார். இதென்ன? ஒரு மாய்மாலம்! இதென்ன? காகத்தின் கிரியை. பாருங்கள், ஒருபுறம் சாத்தானுக்கு ஊழியம் அதே நேரத்தில் மறுபுறம் தேவனுக்கும் ஊழியம். அது ஊழியமாகயில்லாமல், தொழிலாகயிருந்ததால் கனிகொடுக்கவில்லை. மாறாக அது கனியைப் போன்று பார்வைக்குத் தெரிந்தது. அதனால் மக்கள் வஞ்சிக்கப்பட்டனர்.

24. ஒரு அரசாங்க ஊழியக்காரன் தேவனுடைய ஊழியக்காரனாக இருக்க முடியவே முடியாது. ஒரு கிறிஸ்தவன் கிரயத்துக்கு மீட்டுக்கொள்ளப்பட்டவன். தேவனுக்குரியவன். 1கொரி.6:20, 7:23. தேவனுக்கு சொந்தமானவன். இப்படியிருக்க அவன் தன்னை யாரிடமிருந்து (சாத்தான்) கிரயத்துக்கு மீட்டுக் கொண்டாரோ அவனுக்கே தண்டில் சேவகம் செய்ய எழுதிக்கொடுத்து, அவனுக்கு எப்படி ஊழியம்/பணி அவனுடைய அலுவலகத்துக்கு சென்று செய்ய முடியும்? ஒருக்காலும் முடியாது. ஆக ஒருவன் நிச்சயமாக இரண்டு எஜமான்களுக்கு ஊழியம் செய்ய முடியாது. ஏதாவது ஒருவனுக்கு தான் ஊழியம் செய்ய முடியும். ஒருவன் ஒரே நேரத்தில் தேவனுடைய ராஜ்யத்திலும் மற்றொரு பக்கம் மனுஷனுடைய ராஜ்யத்திலும் ஊழியக்காரனாயிருக்க முடியாது. முடியவே முடியாது. நீ சாத்தானுடைய அரசாங்கத்திலும் தேவனுடைய சபையிலும் ஊழியக்காரனாயிருக்க முடியாது. முடியவே முடியாது. நீ தண்டில் சேவகம் செய்ய தேவனுக்கும், மற்றொருவனுக்கும் (அரசாங்கம் அல்லது தனியார் ஸ்தலம்) ஒரே நேரத்தில்

எழுதிக்கொடுக்க முடியாது. யாராவது ஒருவருக்குத்தான் ஒரே நேரத்தில் தண்டில் சேவகம் செய்ய எழுதிக்கொடுக்க முடியும். ஆதலால் நீ இரண்டு எஜமான்களுக்கு ஊழியம் செய்ய முடியாது.

25. அப்படியானால் இரண்டு எஜமான்களுக்கு ஊழியம் செய்யும் இவர்கள் யாவரும் கர்த்தரால் ஏற்படுத்தப்பட்டவர்களா? நிச்சயமாக இவர்கள் தேவனுடைய சித்தத்துக்குப் புறம்பாக அவருக்கென்று ஒரு ஊழியம் செய்கிறவர்கள். மேலும் ஒரு ஆவிக்குரியவன், பரிசுத்தஆவியினால் மறுபிறப்பு அடைந்தவன் தேவனுடைய ஊழியக்காரனாயிருந்து, அதே நேரத்தில் சாத்தானுடைய ஆளுகையிலிருந்து அவனுக்கும் பணிசெய்ய முடியவே முடியாது. இது எப்படியென்றால் தேவனால் தெரிந்துகொள்ளப்பட்டவர்களும் வஞ்சிக்கப்படத்தக்கதாக அற்புத அடையாளங்கள் நடக்கும். ஆனால் தேவனால் தெரிந்துகொள்ளப்பட்டவர்கள் வஞ்சிக்கப்பட முடியாது. தெரிந்துகொள்ளப்படாதவர்கள் வஞ்சிக்கப்படுவார்கள்.

26. ஆதலால் ஒருபுறம் சாத்தானுடைய அரசாங்கத்தில் ஊழியம், ஊதியம், ஓய்வூதியம். ஆதாவது இப்பிரபஞ்சத்தின் மேல் ஆசை. பணஆசை. அதாவது ஜீவனத்தின் பெருமை. மறுபுறம் தேவனுடைய சரீரமாகிய சபையை பக்திவிருத்தியடையச் செய்ய ஊழியம். ஊதியம்; தசமபாகம், காணிக்கை, இவர்கள் தேவனுடைய வசனத்தைக் கொண்டு வியாபாரம் செய்கிறார்களேயன்றி மற்றபடியல்ல. இவர்கள் ஊழியம் செய்யவராமல், ஊழியம் கொள்ளும்படி வந்தவர்கள். மாற்.10:45. பாருங்கள், அரசாங்க அலுவலர் ஒரு அரசனின் ஊழியக்காரன். 1இரா.20:23. சாத்தான் இந்த உலகத்தின் அதிபதி. அவனுடைய அரசாங்க அலுவலர், அவனுடைய ஊழியக்காரனே. இது உண்மை, சத்தியம். அவனுடைய ராஜ்யத்தில், தேவனுடைய மனுஷன் ஊழியம் கொள்ள முடியாது, ஊதியம் பெற முடியாது. இரண்டு எஜமான்களுக்கு ஊழியம் செய்ய இவர்கள் இப்பிரபஞ்சக் கவர்ச்சிக்கு அடிமைப்பட்டவர்கள். இவ்வுலக ஆவியையுடையவர்கள் இப்பிரபஞ்சத்துக்குரியவர்கள். கிறிஸ்தவின் சீஷர்கள் இப்பிரபஞ்சத்திற்குரியவர்கள் அல்ல, இவ்வுலகத்திற்கு உரியவர்கள் அல்ல. கிறிஸ்துவினுடைய ஊழியக்காரர்கள், ஆசாரியர்கள், லேவியரைப் போன்று பிரித்தெடுக்கப்பட்டவர்கள், தேவனால் ஏற்படுத்தப்பட்டவர்கள்.

27. இந்த பூமியில் இரண்டு ராஜ்யம் உண்டு. ஒன்று சாத்தானின் ராஜ்யம் அதற்கு அதிபதி சாத்தான். அடுத்தது தேவனுடைய ராஜ்யம். அது பரிசுத்தஆவியினால் ஆளுகை செய்யப்படுகிறது. சாத்தானுடைய ராஜ்யம் கண்களினால் காணக்கூடியது. தேவனுடைய ராஜ்யம் கண்களால் காணக்கூடாத ராஜ்யம். அது தான் பரிசுத்தஆவி. இந்த ராஜ்யத்தில் ஜலத்தினாலும் ஆவியினாலும் பிறந்து மறுபிறப்படைந்தவர்கள் உண்டு. இவர்கள் இந்த உலகத்தில் வாழ்ந்தாலும், இந்த உலகத்தினால் தங்களை கறைப்படுத்திக் கொள்ளமாட்டார்கள். அவர்கள் சரீரத்தில் இவ்வுலகத்துக்குரியவர்களாயிருந்தாலும் ஆத்துமாவில் பரிசுத்தஆவியை உடையவர்கள்.

28. அரசாங்க உத்தியோகத்தில் இருந்து கொண்டு ஐந்துவகை ஊழியத்தை செய்கிறவர்கள், தேவ சித்தத்துக்குப் புறம்பாக அவருக்கென்று ஒரு ஊழியம் செய்கிறவர்கள். திருவசனத்தைக் கொண்டு வியாபாரம் செய்கிறவர்கள். அப்படிப்பட்டவர்களை விட்டு விலகுங்கள், உங்களை வேறுபடுத்திக் கொள்ளுங்கள் என்று உங்களை எச்சரிப்பது என் மேல் விழுந்த கடமையாயிருக்கிறது. முடிவாக ஒருவன் இரண்டு எஜமான்களுக்கு ஊழியம் செய்ய முடியாது. ஜென்மசுபாவமான மனுஷனோ தேவனுடைய ஆவிக்குரியவைகளை ஏற்றுக்கொள்ளான். அவைகள் அவனுக்கு பைத்தியமாகத் தோன்றும்; அவைகள் ஆவிக்கேற்ற பிரகாரமாய் ஆராய்ந்து நிதானிக்கப்படுகிறவைகளானதால், அவைகளை அறிய மாட்டான். ஆவிக்குரியவன் எல்லாவற்றையும் ஆராய்ந்து நிதானிக்கிறான். அவன் மற்றொருவனாலும் ஆராய்ந்து நிதானிக்கப்படான்.

29. கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினுடைய கிருபை உங்களுடனே கூட இருப்பதாக. கிறிஸ்து இயேசுவுக்குள்ளான என்னுடைய அன்பு உங்கள் எல்லோரோடும் கூட இருப்பதாக. ஆமென்.

*டிசம்பர், 2003.*

*கிறிஸ்துவின் அன்பில்,*
*சகோ.காலேப் யோசுவா.*